## சுருக்கம்

மாற்றுத் திறனாளிகள் நலத் துறை - பணியமைப்பு - புதியதாக உருவாக்கப்பட்ட மயிலாடுதுறை மாவட்டத்திற்கு மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலகம் தோற்றுவிப்பது - பணியிடங்கள் மற்றும் உள்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துதல் - ஆணை - வெளியிடப்படுகிறது.

---

மாற்றுத் திறனாளிகள் நல (மா.தி.ந.1)த் துறை

அரசாணை (நிலை) எண் 11

நாள்: 26.10.2021
பிலவ, ஐப்பசி – 9,
திருவள்ளுவர் ஆண்டு, 2052
படிக்கப்பட்டது:

1. அரசாணை (நிலை) எண் 183 வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை, நாள் 07.04.2020.
2. மாற்றுத் திறனாளிகள் நல இயக்குநரின் கடிதம் ந.க. எண் 12239/நிர்.1/2019, நாள் 26.12.2020 மற்றும் 28.01.2021.

-----

ஆணை:

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் நாகப்பட்டினம் மாவட்டத்திலிருந்து புதிதாக மயிலாடுதுறை என்ற மாவட்டம் உருவாக்கப்பட்டு ஆணை வெளியிடப்பட்டது.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநர், மாற்றுத் திறனாளிகள் நலத் துறையின் மூலம் செயல்படுத்தப்படும் பல்வேறு நலத்திட்டங்கள் அனைத்தும் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகத்ததின் மூலமாக மாற்றுத்திறனாளி நபர்களுக்கு செயல்படுத்தப்பட்டு வருகிறது என்றும், இத்திட்டங்களுக்கான சரியான மாற்றுத்திறனாளிகளைக் கண்டறிந்து நலத்திட்ட உதவிகளை வழங்க ஏதுவாக புதியதாக உருவாகக்கப்பட்ட மயிலாடுதுறை மாவட்டத்திற்கு புதிதாக மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகம் தோற்றுவிக்கப்பட வேண்டும் என்றும் அவ்வலுவலகத்திற்கு தேவையான அலுலவக பணியாளர் பணியிடங்களை தோற்றுவிக்குமாறும், தோற்றுவிக்கப்படும் பணியிடங்களுக்கான செலவினத்தை ஒப்பளிப்பு செய்யுமாறும் அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

3. மேற்காணும் மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநரின் கருத்துருவினை கவனமுடன் பரிசீலனை செய்த அரசு, அதனை ஏற்று, மயிலாடுதுறை மாவட்டத்தில் புதிய மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகத்தை இவ்வாணையின் இணைப்பு-1ல் தெரிவிக்கப்பட்டுள்ள பணியிடங்களுடன் தோற்றுவித்து ஆணையிடுகிறது. மேலும் இவ்வாணையின் இணைப்பு-1ல் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு புதியதாக தோற்றுவிக்கப்பட்ட மயிலாடுதுறை மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலக பணியாளர்களுக்கு

(த.பி.பா.)

ஊதியம் வழங்கும் வகையில் ஆண்டொன்றுக்கு தொடர் செலவினமாக ரூ.58,62,600/- (ரூபாய் ஐம்பத்தெட்டு இலட்சத்து அறுபத்திரெண்டாயிரத்து அறுநூறு மட்டும்) மற்றும் உள்கட்டமைப்பு வசதிகளுக்காக ஆண்டொன்றுக்கு தொடர் செலவினமாக ரூ.6,19,600/- (ரூபாய் ஆறு இலட்சத்து பத்தொன்பதாயிரத்து அறுநூறு மட்டும்) என மொத்தம் ரூ.64,82,200/- (ரூபாய் அறுபத்துநான்கு இலட்சத்து எண்பத்திரெண்டாயிரத்து இருநூறு மட்டும்) தொடர் செலவினமாக ஒப்பளிப்பு செய்தும், மயிலாடுதுறை மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகம் தோற்றுவிப்பதற்கு உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதற்கு தொடராச் செலவினமாக ரூ.26,70,000/- (ரூபாய் இருபத்தாறு இலட்சத்து எழுபதாயிரம் மட்டும்) ஒப்பளிப்பு செய்தும் அரசு ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி-3ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட செலவினம் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

| வ. எண். | விரிவானகணக்குத் தலைப்பு<br>கோரிக்கை எண். 52 - 02<br>2235 – சமூகப் பாதுகாப்பும் நலனும் - 02 சமூக நலன் – 101 மாற்றுத் திறனாளிகள் நலன்- மாநிலச் செலவினங்கள் – BD மண்டல மறுவாழ்வு மையங்கள் | நடப்பாண்டு 2021-2022ல் 4 மாதங்களுக்கான செலவினங்களுக்கு அனுமதிக்கப்படும் (தொகை ரூ.) |
|---|---|---|
| 1 | 301–சம்பளங்கள் 01 - அடிப்படை சம்பளம் (IFHRMS DPC 2235 02 101 BD 30101) | 14,85,000/- |
| 2 | 301–சம்பளங்கள் 02 – மருத்துவப் படி (IFHRMS DPC 2235 02 101 BD 30102) | 12,000/- |
| 3 | 301–சம்பளங்கள் 03 – மருத்துவச் செலவுகள் (IFHRMS DPC 2235 02 101 BD 30103) | 5,000/- |
| 4 | 301–சம்பளங்கள் 04 – ஏனைய படிகள் (IFHRMS DPC 2235 02 101 BD 30104) | 10,000/- |
| 5 | 301–சம்பளங்கள் 06 – வீட்டு வாடகைப் படி (IFHRMS DPC 2235 02 101 BD 30106) | 1,80,000/- |
| 6 | 301–சம்பளங்கள் 07 – பயணச் சலுகை (IFHRMS DPC 2235 02 101 BD 30107) | 10,000/- |
| 7 | 303 - அகவிலைப் படி 01 - அகவிலைப்படி (IFHRMS DPC 2235 02 101 BD 30301) | 2,53,000/- |
| 8 | 305 - அலுவலகச் செலவுகள்01 - தொலைபேசிக் கட்டணங்கள் (IFHRMS DPC:2235 02 101 BD 30501) | 8,000/- |
| 9 | 305 - அலுவலகச் செலவுகள்02 - ஏனைய சில்லறைச் செலவுகள் (IFHRMS DPC:2235 02 101 BD 30502) | 8,000/- |

| | | |
|---|---|---|
| 10 | 305 - அலுவலகச் செலவுகள்03 - மின் கட்டணங்கள் (IFHRMS DPC:2235 02 101 BD 30503) | 16,000/- |
| 11 | 305 - அலுவலகச் செலவுகள்05 - அறைகலன் (IFHRMS DPC:2235 02 101 BD 30505) | 1,50,000/- |
| 12 | 306 - வாடகை, கட்டண வீதங்கள், வரிகள்01 - வாடகை (IFHRMS DPC:2235 02 101 BD 30601) | 40,000/- |
| 13 | 319 - இயந்திரமும் சாதனமும்03 - பராமரிப்பு (IFHRMS DPC:2235 02 101 BD 31903) | 4,000/- |
| 14 | 321 - மோட்டார் வண்டிகள்01 - வாங்குதல் (IFHRMS DPC:2235 02 101 BD 32101) | 8,10,000/- |
| 15 | 345 - பெட்ரோலியம், எண்ணெய் மற்றும் மசகெண்ணெய் 01- பெட்ரோலியம், எண்ணெய் மற்றும் மசகெண்ணெய் (IFHRMS DPC:2235 02 101 BD 34501) | 35,000/- |
| 16 | 376 - கணினியும் துணைப் பாகங்களும்01 - வாங்குதல் (IFHRMS DPC:2235 02 101 BD 37601) | 2,10,000/- |
| 17 | 376 - கணினியும் துணைப் பாகங்களும் 03 - எழுதுபொருள் (IFHRMS DPC:2235 02 101 BD 37603) | 10,000/- |
| 2235 - சமூகப் பாதுகாப்பும் நலனும் 02 - சமூக நலன் 101 -மாற்றுத்திறனாளிகள் நலன்-மாநிலச்செலவினங்கள் MV - மாற்றுத் திறனாளி குழந்தைகளுக்கான நடமாடும் சிகிச்சைப் பிரிவுகள் | | |
| 18 | 321 - மோட்டார் வண்டிகள் 01 - வாங்குதல் (IFHRMS DPC:2235 02 101 MV 32101) | 15,00,000/- |
| 19 | 333 தொழில்முறை, சிறப்புப் பணிகளுக்குத் தொகை கொடுத்தல் 04 - ஒப்பந்த ஊதியம் (IFHRMS DPC:2235 02 101 MV 33304) | 60,000/- |
| 20 | 345 - பெட்ரோலியம், எண்ணெய் மற்றும் மசகெண்ணெய் 01- பெட்ரோலியம், எண்ணெய் மற்றும் மசகெண்ணெய் (IFHRMS DPC:2235 02 101 MV 34501) | 27,000/- |
| | மொத்தம் | 48,33,000/- |

5. மேலே பத்தி-3ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் ஒரு "புதுப்பணி" குறித்த செலவினமாகும். இதற்கு சட்டமன்ற பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும்.

மேற்குறித்த ஒப்புதலை எதிர்நோக்கி இச்செலவினம் முதற்கண் எதிர்பாராச் செலவின நிதியிலிருந்து முன்பணம் பெறுவதன் மூலம் மேற்கொள்ளப்படும். முன்பணத்தை அனுமதிக்கின்ற ஆணைகள் நிதி (வரவு-செலவு, பொது-1) துறையால் தனியாக பிறப்பிக்கப்படும். எதிர்பாரா செலவின நிதியிலிருந்து முன்பணம் பெறத் தேவையான விண்ணப்பத்தை உரிய படிவத்தில் இவ்வரசாணையின் நகலுடன் நிதித் (வரவு-செலவு, பொது-1) துறைக்கு அனுப்பி வைக்குமாறு மாற்றுத் திறனாளிகள் நல இயக்குநர் அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார். மேலும் இக்கூடுதல் செலவினத்திற்கான உரிய கருத்துருவை 2021-2022ஆம் ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில் சேர்ப்பதற்கு ஏதுவாக தவறாது, உரிய நேரத்தில், நிதித் (சந/வ.செ.பொ-I)த் துறைக்கு அனுப்பி வைக்குமாறு மாற்றுத் திறனாளிகள் நல இயக்குநர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

6. இவ்வாணை நிதித்துறையின் அலுவல்சாரா குறிப்பு எண் 15085/(சந.), நாள் 25.10.2021 அலுவல்சாரா எண் PSL 0016/மைமஆபி/2021, நாள் 25.10.2021-இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது. மேலும் கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண் 638-படி (அறுநூற்று முப்பத்தெட்டு) வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஆர். லால்வேனா
அரசு செயலாளர்

பெறுநர்
மாற்றுத் திறனாளிகள் நல இயக்குநர், சென்னை-5.
மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர்,
மயிலாடுதுறை மாவட்டம்.
(மாற்றுத் திறனாளிகள் நல இயக்குநர் வழியாக)
மாநிலக் கணக்காயர் சென்னை-18.

நகல்:
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை-9.
செயலரின் முதுநிலை முதன்மை தனிச் செயலாளர்,
மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, சென்னை-9.
மனிதவள மேலாண்மை துறை, சென்னை-9.
நிதி(சந,/வழிவகைகள்-I/வ.செ.பொ-I/II/மைமஆபி)த் துறை,
சென்னை-9.
இருப்பு கோப்பு / உதிரி நகல்

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்

## இணைப்பு -1

**அரசாணை (நிலை) எண். 11, மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, நாள் 26.10.2021**

**புதியதாக தோற்றுவிக்கப்பட்ட மயிலாடுதுறை மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகத்திற்கு ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள பணியிடங்கள்**

| வ. எண் | புதிதாக தோற்றுவிக்கப்படும் பணியிடங்கள் விவரம் | பணியிடங்களின் எண்ணிக்கை | ஊதிய விகிதம் | சாராசரி ஊதியம் | ஆண்டு செலவினம் |
|---|---|---|---|---|---|
| 1. | மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் | 1 | 37700-138500 | 78600 | 943200 |
| 2. | இளநிலை மறுவாழ்வு அலுவலர் | 1 | 35600-130800 | 74200 | 890400 |
| 3. | முடநீக்கு தொழில்நுட்ப பணியாளர் | 1 | 35400-130400 | 73900 | 886800 |
| 4. | பல்நோக்கு மறுவாழ்வு உதவியாளர் | 1 | 19500-71900 | 40750 | 489000 |
| 5. | செயல்திறன் உதவியாளர் | 1 | 19500-71900 | 40750 | 489000 |
| 6. | இளநிலை உதவியாளர் | 1 | 19500-71900 | 40750 | 489000 |
| 7. | தட்டச்சர் | 1 | 19500-71900 | 40750 | 489000 |
| 8. | உதவி வரவேற்பாளர் | 1 | 15900-58500 | 33150 | 397800 |
| 9. | அலுவலக உதவியாளர் | 1 | 15700-58100 | 32850 | 394200 |
| 10. | இரவுக் காவலர் | 1 | 15700-58100 | 32850 | 394200 |
| | மொத்தம் | 10 | | | 5862600 |

ஆர். லால்வேனா
அரசு செயலாளர்

// உண்மை நகல் //

பிரிவு அலுவலர்

## இணைப்பு-2

அரசாணை (நிலை) எண் 11, மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, நாள் 26.10.2021

புதியதாக தோற்றுவிக்கப்பட்ட மயிலாடுதுறை மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகத்திற்கு உள்கட்டமைப்பு வசதிகளுக்கு ஒப்பளிக்கப்பட்ட தொடர் செலவினம்

| வ. எண் | செலவின விவரம் | மாதம் ஒன்றுக்கு ஆகும் செலவினம் | ஆண்டு செலவினம் |
|---|---|---|---|
| 1. | தொலைபேசி கட்டணம் | 2000 | 24,000 |
| 2. | சில்லரை செலவினம் | 1000 | 12000 |
| 3. | மின் கட்டணம் | 4000 | 48000 |
| 4. | அலுவலக வாடகை | 10000 | 120000 |
| 5. | பராமரிப்பு செலவினம் | 1000 | 12000 |
| 6. | எரிபொருள் செலவினம் | 8700 | 104400 |
| 7. | எழுதுபொருள் செலவினம் | 0 | 30000 |
| 8. | இதர செலவினம் | 0 | 10000 |
| 9. | Mobile Van ஓட்டுநர் | 10000 | 120000 |
| 10. | Mobile Van உதவியாளர் | 5000 | 60000 |
| 11. | Mobile Van எரிபொருள் செலவினம் | 6600 | 79200 |
| மொத்தம் (2) | | | 619600 |
| மொத்தம் 1+2 | | | 6482200 |

ஆர். லால்வேனா
அரசு செயலாளர்

// உண்மை நகல் //

பிரிவு அலுவலர்

## இணைப்பு-3

**அரசாணை (நிலை) எண் 11, மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, நாள் 26.10.2021**

**புதியதாக தோற்றுவிக்கப்பட்ட மயிலாடுதுறை மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகத்திற்கு உள்கட்டமைப்பு ஏற்படுத்துவதற்கு ஒப்பளிப்புச் செய்யப்பட்டுள்ள தொடராச் செலவினங்களின் விவரம்**

| வ. எண் | தொடராச் செலவின விவரம் | எண்ணிக்கை | மொத்த விலை (ரூ) |
|---|---|---|---|
| 1. | நடமாடும் சிகிச்சைப்பிரிவு ஊர்தி | 1 | 15,00,000/- |
| 2. | ஈப்பு (டீசல்- வாகனம்) | 1 | 8,00,000/- |
| 3. | கணினி | 3 | 1,50,000/- |
| 4. | மரத்தளவாடப்பொருட்கள் | 1 | 1,50,000/- |
| 5. | அச்சுப்பொறி (Printer) (Rs.20,000/- each 3) | 3 | 60,000/- |
| 6. | மிதிவண்டி | 1 | 10,000/- |
| மொத்தம் | | | 26,70,000/- |

ஆர். லால்வேனா
அரசு செயலாளர்

// உண்மை நகல் //

பிரிவு அலுவலர்